DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.03/2018**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | தமிழ்செல்வன் | Caste: | |
| Father's Name: | கருங்கன் | Calling: | கிராம நிர்வாக அலுவலர் |
| Village: | மேலச்சீத்தை | Religion: | |
| Taluk: | | Age: | 40 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 22.10.2025

( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது இராமநாதபுரம் தாலுகா குயவன்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.05.2017ம் தேதி கீழக்கரை குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினேன். அன்று காலை சுமார் 8.45 மணியளவில் கீழக்கரை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் அழைத்ததன்பேரில் நானும் எனது கிராம உதவியாளர் சரவணக்குமாரும் கீழக்கரை ஜெட்டிபாலம் என்ற இடத்திற்கு சென்றோம். அங்கு கீழக்கரை காவல்நிலைய கு.எண். 121/2017 வழக்கின் எதிரிகளான தெய்வேந்திரன், ராஜா என்ற ஊசிமண்டையன் ஆகிய இருவரையும் கைது செய்து கீழக்கரை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் வைத்திருந்தார். 1ம் எதிரியான தெய்வேந்திரன் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் காலை 9.00 மணிக்கு கொடுத்தார். அன்று காலை 10 மணியளவில் தெய்வேந்திரன்

பெட்ரோல் மற்றும் டீசல் வாங்கியதற்கு உண்டான ரசீதை தன்னுடைய சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து டிஎஸ்பியிடம் கொடுத்தார். 2ம் எதிரியான ராஜா என்ற ஊசிமண்டையன் கீழக்கரை முள்ளிவாடியில் உள்ள ஹமீதியா பள்ளி அருகே ஒரு வாட்டர் பாட்டிலை மறைத்து வைத்திருப்பதாக சொல்லி அழைத்து சென்றார். அவர் அழைத்து சென்று ஒரு புதரில் இருந்து எடுத்து கொடுத்தார். அந்த வாட்டர் பாட்டிலில் பெட்ரோலும், டீசலும் கலந்து இருந்தது. அதை டிஎஸ்பி அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும் சரவணக்குமாரும் கையெழுத்து செய்தோம். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் உத்திரகோசமங்கை குற்ற வழக்கு சம்பந்தமாக சித்தார்கோட்டை சமத்துவபுரத்தில் உள்ள 1வது எதிரியின் மாமியார் வீட்டின் பின்பாக மறைத்து வைத்திருப்பதாகவும் அதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னதன் பேரில் எதிரிகளையும் எங்களையும் அழைத்து கொண்டு டிஎஸ்பி அவர்கள் சித்தார்கோட்டை சென்றார்கள். மாமியார் வீட்டின் பின்புறம் உள்ள மண்ணிலிருந்து தங்க நகைகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை டிஎஸ்பி அவர்கள் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அப்போது மணி 1.30-3.00 இருக்கும். அந்த அத்தாட்சியில் நானும் சரவணக்குமாரும் கையெழுத்து செய்தோம். 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது. 2வதாக உள்ள கையெழுத்து என் உதவியாளர் சரவணக்குமாருடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5**. 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என் கையெழுத்து. 2வதாக உள்ள கையெழுத்து

சரவணக்குமாருடையது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6**. Horn Bill என்று எழுதப்பட்ட ஊதாநிற மூடியுடன் கூடிய 100 மிலி டீசல் பெட்ரோல் கலந்த திரவத்துடன் கூடிய வாட்டர் பாட்டில் ஒன்று கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7**. 2 வது கையெழுத்து என் உதவியாளர் சரவணக்குமாருடையது. போலிசார் கைப்பற்றிய வாட்டர்பாட்டிலை என்னால் அடையாளம் காட்ட முடியும். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் என் பணிநிமித்தமாக கீழக்கரை காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றால் சரிதான். கீழக்கரை காவல்நிலையத்தில் பணியாற்றிய காவலர்கள் அனைவரும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் கீழக்கரையில் உள்ள எனது அலுவலகத்தில் காலை 8.45 மணியளவில் இருக்கும்போது கீழக்கரை போலிசார் கூப்பிட்டார்கள். நான் தினமும் காலை 8.45 மணிக்குள் அலுவலகத்திற்கு சென்றுவிடுவேனா என்றால் சென்றுவிடுவேன். நான் இருந்த இடத்திற்கும் போலிசார் எதிரிகளை கைது செய்து வைத்திருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். காவல்துறை அதிகாரிகள்தான் என்னை அவர்களது வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1,2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த பொருளையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும்

போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)